ஆனந்த புரத்திலே ஆகுதியாகிய அக்கினி பிளம்புகளே
ஆற்றலின் தோற்றமாய் அன்று களமாடிய வீர வேங்கைகளே 2
மாற்றத்தின் தேவையால் மாதவம் செய்த மான மறவர்களே
போற்றுதற் குரிய உன்னத வேள்வியின் புனித சிகரங்களே

வீர வணக்கம் வீர வணக்கம் மாவீரரே எங்கள் வீர வணக்கம் 2

துணிவின் வடிவமாய் துள்ளிக்களம் ஆடிய எம்மின வீரர்களே
பணிவில் பிறப்பிட மாக விளங்கிய பண்புடை உறவுகளே 2
அணியின் தலைமையில் அற்புதமாக பணிபல செய்தவரே
தணியாத தமிழீழ தாகத்தால் எழுந்திட்ட தற்கொடை ஆழர்களே

வீர வணக்கம் வீர வணக்கம் மாவீரரே எங்கள் வீர வணக்கம் 2

அச்சம் என்பதே இல்லை என்றிட்ட லட்சிய வீரர்களே
துச்சம் ஆகியே துணிந்து எழுந்திட்ட துணிவின் சிகரங்களே 2
நச்சுப்புகையால் நாமிளந்தோம் உமை ஆனந்த புரத்திலே
மிச்சம் இன்றியே பகையை அழித்து வெல்வோம் ஈழத்திலே

வீர வணக்கம் வீர வணக்கம் மாவீரரே எங்கள் வீர வணக்கம் 2

நெஞ்சத்தில் வீரம் பொங்கிய வீரர் தலைவரின் தளபதிகள்
அஞ்சியே ஓட வைத்தார் பலமுறை சிங்கள பகையணியை 2
வென்சமர் ஆடியே விடுதலை தீயை மூட்டி வளத்தவரே
விஞ்சிய தியாகம் பல புரிந்திட்ட வீர மறவர்களே

வீர வணக்கம் வீர வணக்கம் மாவீரரே எங்கள் வீர வணக்கம் 2

கரிகாலன் சேனையில் காவியம் படைத்திட்ட கரும்புலி மறவர்களே
புரியாத புதிராகி புதுவேகம் கொண்டு களமாடிய வீரர்களே 2
வரிப்புலியாகியே வரலாற்று சமர்களில் வளிகாட்டிப் போனவரே
சரித்திரத்திலே என்றும் நிலையான சாதனை படைத்தீரே

வீர வணக்கம் வீர வணக்கம் மாவீரரே எங்கள் வீர வணக்கம் 2